கட்சியின் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராக அங்கீகரித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி மீது—பேரவைத் தலைவருடைய செயல்பாடுகள் பற்றி பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளது குறித்து.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 220-ன் கீழ் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலேயும், பொது மக்களிடையே தவறான எண்ணத்தை உருவாக்கும் வகையிலேயும் அவர்களுடைய செயல்பாடுகளைப் பற்றி பத்திரிகை நிறுவனத்திற்கு, நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் சொன்னச் செய்தி, ''தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து'' ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது, அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். இதற்கான பத்திரிகை நகல்களை தங்களுக்குக் கொடுத்துள்ளேன். இதைப் பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள தங்கள் அனுமதி வேண்டுகிறேன். திரு. வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் ஒரு பொறுப்புள்ள கட்சியின் தலைவர் என்கின்ற வகையிலேயும், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலேயும் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே வெளியேற்றப்பட்டவர்கள் இன்றைக்கு முழுவதும் அவைக்கு வரக் கூடாது என்று அறிவித்திருக்கிறேன்.

திரு. கே. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நடக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளில் தாங்கள் அளித்த தீர்ப்பு நிறைவேற்றப்படாமல், அந்தத் தீர்ப்பை மீறி நடப்பதும், திரும்பவும் அதை மீறி வருபவர்கள் சபையிலே அந்தக் காரியத்தைச் செய்வது என்பதும் சரியல்ல. எனக்கு எந்த உறுப்பினர் மீதும்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. ஏற்கெனவே அவர்கள் 2 பேரும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். வெளியேற்றி ஆயிற்று. அவர்கள் அவைக்கு ஒரு நாள் வரக்கூடாது என்று சொல்லி ஆயிற்று.

1991 சனவரி 21]

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற மரபுகளுக்குரிய மரியாதையைக் கொடுத்து நாட்டுமக்கள் மத்தியிலே ஒரு நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டிய ஒரு தலைவர், அதை இழக்கின்ற வகையில் ஒரு பயங்கரமான, கடுமையான குற்றச்சாட்டைப் பேரவைத் தலைவர் மீதும், பேரவை நடவடிக்கைகள் மீதும், பத்திரிகையிலே செய்தியாகத் தெரிவித்து உள்ளார்கள், அவர்கள் சொன்ன செய்தியில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக....(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. நா. கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. மூக்கன், திரு. ராஜூ, திருமதி லட்சுமி ஆகிய மூன்று உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர் என்பது ஒரு தவறான, உண்மைக்குப் புறம்பான செய்திதான் என்பதைத் தாங்கள் ஏற்கெனவே 20-8-90 அன்று தாங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இந்தப் பேரவையில் அளித்த தீர்ப்பின் மூலம் உறுதிப்படுத்தியிருக்கிறீர்கள். அப்படிபட்ட தீர்ப்பு அளிக்கப்பட்டு இருந்தும் வேண்டுமென்றே தாங்கள் தீர்ப்பு வழங்கியது மாதிரியும், அதற்கு ஏதோ உள்நோக்கம் இருப்பது போலவும் உங்களைப் பற்றி ஒரு பயங்கரமான குற்றச்சாட்டை அவர்கள் சொல்லியிருப்பது இந்த அவையின் பெருமையை மாத்திரமல்ல, ஜனநாயக மரபுக்கே இந்த அவையிலே களங்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றார் என்பது மட்டுமல்லாமல், வேண்டுமென்று நிலைமையைத் திரித்துக் கூறியது மாத்திரமல்லாமல் வேண்டுமென்றே அவைத் தலைவர் மீது களங்கத்தை உருவாக்கியுள்ளார் என்றும், இது அவை உரிமை மீறிய செயலாகும் என்றும் கூறி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை தொடர்பாக என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அளிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர்கள் இப்படிச் சொன்னதற்குப் பிறகு ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக வேண்டாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொன்னபோது திரு. வாழப்பாடி இராமமூர்த்தி சொன்னதிலே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. இல்லை. இது தொடர்பாகப் பேசாதீர்கள். வேறு செய்தி பேசுங்கள்.

11-00 மணி

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அறிவிக்கும்போது Point of order கூடாது.

1. திரு. சா. சிவசுப்பிரமணியன்.

2. திரு. எம். இராமச்சந்திரன்.

3. திரு. ஆ. நடராசன்.

4. பேராசிரியர் க. பொன்னுசாமி.

5. திரு. பி. வி. இராஜேந்திரன்.

6. திரு. செ. நார்முகமது.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைப்பற்றி ஒரு குற்றச்சாட்டு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாகப் பேசக் கூடாது. No point of order உட்காருங்கள்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசமைப்புச் சட்ட விதிகளின் கீழ் உறுப்பினர் பதவித் தகுதியின்மைக்கு ஆளாகியிருப்பதாகச் சில உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு 19-1-1991 ஆம் நாளன்று அளித்த மனு—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்கள்— மாண்புமிகு 3 உறுப்பினர்கள்—நாங்கள், நேற்று, 19 ஆம் தேதியிட்டு 3 பேரை, கட்சியை விட்டு நீக்கப்பட்டவர்களை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS